DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.15**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | முன்னமலை |
| Father Name | : | புளியக்கோன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025.

(2 எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 1 வது எதிரி ஆஜர் இல்லை, 1 வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது மாங்குளத்தில் குடியிருக்கிறேன். நான் உடல் நலம் இல்லாமல் வீட்டில் ஓய்வில் இருக்கிறேன். எனக்கு தேதி ஞாபகமில்லை. இன்றிலிருந்து சுமார் 9 அல்லது 10 வருடங்களுக்கு முன்பு நான் மூன்றுமாவடி, அழகர் நகரில் உள்ள அண்ணாமலை டீக்கடையில் வேலை பார்த்து வந்தேன். எனக்கு இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015 ம் தேதி இரவு சுமார் 11.10 மணியளவில் நான் கடையில் இருந்த போது, குரு சலூன் கடை அருகில் நிறுத்தியிருந்த காரை எடுக்க முயன்ற நபர் திடீரென சத்தம்போட்டுக்கொண்டு கடை பக்கமாக ஓடி வந்தார் என்றும், அப்போது அங்கு என்ன நடந்தது என்று பார்ப்பதற்காக நானும் அபிராமி டிப்பன் சென்டர் உரிமையாளர் ரெங்கநாதனும்

அருகில் சென்றோம் என்றும், அங்கு ஏற்கனவே தெரிந்த கற்பகநகரை சேர்ந்த சகாய பிரவீன் என்பவர் கத்தியுடன் நின்றுகொண்டிருந்தார் என்றும், எங்களை பார்த்து மிரட்டினார் என்றும், அந்த பகுதியில் வந்தவர்கள் அலறியடித்துக்கொண்டு நாலாபுரமும் சிதறி ஓடினார்கள் என்றும், பிறகு நான் எனது கடையின் ஷட்டரை பாதி அடைத்து பயத்துடன் எட்டிப்பார்த்தேன் என்றும், பின்னர் நடந்த சம்பவத்தை கேள்விப்பட்டேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.